# சுற்றி நில்லாதே பகையே!

பாகம் 42

சென்ற வாரப் பதிப்பில் இத்தொடரைச் சில தனிப்பட்ட காரணங்களால் எழுத முடியவில்லை. அதனால் அலசுவாரம் வாசகர்களுக்கு 2008 புத்தாண்டு வாழ்த்துகளையும், அதோடுதமிழ் புத்தாண்டான தைப்பொங்கல் வாழ்த்துகளையும் இத்தொடரில் தெரிவிக்கிறேன்.

1984 இலிருந்து கடந்த 24 வருடங்களாய் ஈழத் தமிழினம் தனது எந்தவொரு வருடாந்தக் கொண்டாட்டத்தையும் மகிழ்வோடு கொண்டாடவில்லை. அதற்கு முன்னர் உரிமையற்றிருந்தோம். அதன்பின்னர் அடக்கு முறைக்கும் உட்பட்டோம். உரிமையிழந்து வாழ்ந்தபோது பட்டாசாவது கொழுத்த முடிந்தது, அடக்கு முறைக்குட்பட்ட பின்னர் அதற்கும் முடியாமற் போய்விட்டது.

செல்வந்த வீடுகளெல்லாம் ஷெல்வந்த வீடுகளாய் மாறிப்போயின. பொங்கலும் பொருமலுமாய் வாழ்வு கழிகிறது.

தற்போது மீண்டும் ஈழத்தமிழனின் ஜீவ மரணப் போராட்டம் முனைப்புப் பெறுகிறது. நாலாம் கட்ட ஈழப்போரை எதிரியே உத்தியோக பூர்வமாய்த் தொடக்கி வைக்கிறான்.

முன்னே இருப்பது இரண்டே இரண்டு தெரிவுகள்தான். ஒன்றுஈழத்தமிழன் எதிரியிடம் தோற்றுப்போவது - உரிமையற்று, நாதியற்று மூன்றாம் தரப்பிரஜையாய் ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் தேசிய இன அடையாளங்கள் எதுவுமற்றவனாய் சிங்கள மேலாண்மை வாதத் திற்குள், குடியேற்ற காலனியாதிக்க அடக்கு முறைக்குள் சுருண்டு கிடந்து காலப்போக்கில் தன் சுயத்தை இழந்து கரைந்து போவது.

மற்றயது எதிரியுடன் நேருக்கு நேர்நின்று போராடி தேசிய சுயநிர்ணய உரிமையுடன் கூடிய எமது அடையாளத்தை அதாவது தமிழீழத்தை நிறுவுவது.

## அலசுவாரம்

அலசுபவர்: மட்டைக்கிளப்பான்

இவை இரண்டிற்குமிடையே ஏதோ மாய மாய் வேறொன்று இருப்பதாகச் சர்வதேசம் போக்குக் காட்டுகிறது. ஆனால் அப்படியிருந் திருக்கக்கூடிய சாத்தியங்கள் எல்லாமே பொய்யாய்க் கனவாய்ப் புனைகதையாய்ப் போய் விட்டன என்பதுதான் நிதர்சன உண்மை.

ஆக, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் இன்று எமது ஜீவமரணப் போராட்டத்தை இப் பொங்கல் திருநாளோடு ஆரம்பிக்கிறோம்.

எமது இருப்புக்காகப் போராடும் எம்மால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற பிரமையைத் தமிழ்நாட்டு மக்களிடம் ஏற்படுத்தி எமது தொப்புழ்க் கொடி உறவை பிராந்திய வல்லரசான இந்தியா எப்பாடுபட்டாவது அறுத்து விடப் பாடாய்ப் படுகிறது. ஒரு நாடாக முகிழ்த்துத் தன் சுயநிர்ணய உரிமையுடன் வாழத் துடிக்கும் மிகச் சிறிய தேசம் ஒரு பிராந்திய வல்லரசின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகி வீணான பகையை ஒருபோதும் சம்பாதித்துக் கொள்ளாது என்னும் உண்மை நிலை முழுப் பூசனிக்காய் சோற்றுள் மறைக்கப் படுவதுபோல் மறைக்கப்படுகின்றது.

தான் குட்டியடக்கி விடக்கூடிய எட்டும் தூரத்தில் சிறீலங்காவின் ராணுவ கேந்திர பாதுகாப்பு மையங்களை வைத்துக்கொண்டால் ஏனைய தெற்காசிய நாடுகளோ சீனாவோ, அமெரிக்காவோ தன்னை நெருங்கமுடியாது, நெருங்கினால்! என்ன நண்பர்களே என்னவிடயம்? நானொருவன் இருப்பதை எண்ணிப் பார்க்க மாட்டீர்களா? என்று கேள்வி கேட்கலாம் என்பதால் ஈழத்தமிழன் பலிக்கடாவாக்கப்பட்டு இந்தியாவால் ஓரங்கட்டப்படுகிறான். தமிழனின் பலாலியும், திருகோணமலையும் சிறீலங்காவிடம் தாரை வார்க்கப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழன் விடுவிக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடப்படுகின்றது. சிறீலங்கா செல்லப்பிள்ளையாய்ப் பவனிவர ஈழத்தமிழன்பயங்கரவாதியாய்வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகிறான். நயவஞ்சகத்தனமான சர்வதேச ராஜதந்திர விளையாட்டில் நாம் பகடைக்காய்களாய் விழிபிதுங்கி நிற்கிறோம்.

ஆனாலும் இப்பொங்கல் திருநாளில்:

பொங்கடா தமிழா சீறிப் பொங்கடா பொங்கு – கெட்ட
சிங்கள தேசமெம்மைச் சீரழித்திடவோ – நாங்கள்
வங்கமா கடலில் வீழ்ந்து மாய்வதோ – இல்லை
எங்கள் தங்கமார் தமிழை ஈழத் தாயகந்தன்னை மீட்கக்
கங்கணங் கட்டிச் சீறிப் பொங்கடா பொங்கு பொங்கு
ஆயுதம் பெருக்கு மோதும் ஆட்களைப் பெருக்கு – சீறிப்
பாயெமதெதிரி மீது பயந்தவன் புறங் காட்டச்செய்
சாயவை சரித்து வீழ்த்து சரமெனக் குண்டு மாரி
போய் விழ நொறுக்கு அந்தப் பொறுக்கிகள் கழுத்திறுக்கு
தேயமதெமது டேய் நீ திரும்பு உன் தேசத்திற்கு
நாயேயென்றுறுக்கு அந்த நரிகளுக்கெதிராய்ப் பொங்கு
இங்கிலாந் தமெரிக்காவும் இந்தியா ஐரோப்பெல்லாம்
பங்கமாய் எம்மேற் பட்சபாதமாய் நடந்தபோதும்
அங்குலம் தன்னிற்கூட அன்னியன் எமது மண்ணில்
தங்கிடக் கூடாதென்றே பொங்கடா சீறிப் பொங்கு.

ஆரடா எம்மை இங்கே அடிமை கொண்டாள வந்தோன்
போரிலே தோற்கடித்துப் புல்லியராக்க வந்தோன்
நேரிலாதுயர்ந்த வாழ்வால் நேர்மையால் அன்பாற பண்பால்
பாரினில் உயர்ந்த சாதி பைந்தமிழ் ஈழச்சாதி!
வேரினை அறுத்து எம்மை வீழ்த்திட நினைத்தாலெங்கள்
சீரினை மறந்து புன்மைச் சிற்றெறும்புகளாய் மாற
ஊர் படையாமோ நாமென்றுறுமடா! உறுமிப் பொங்கிப்
பாரடா பகையை! கெட்ட பாதகர் அழியப் பாய்ந்து
காரடா தலையை! அந்தக் களிப்பிலே இனிதாய்ப் பொங்கு
வல்வினைகள் போயகலத் தமிழன் வாழ்வில்
வசந்தமது தான்மலர ஊறு செய்யும்
தொல்லையெலாம் பறந்தோடத் துயரம் தீர
துணையாக உலகு வர ஈழதேச
எல்லையெலாம் வசமாக எதிரி சோர
எமக்கெனவோர் தனிநாடு உதயமாக
அல்லயலார் பாரத பாகிஸ்தானெல்லாம்
அரவணைக்க நண்பருடன் நாம் குலாவ
ஷெல் வந்த வீடெல்லாம் பொங்கு ஈழ
தேசமது விடிந்துரிமை சிறக்கப் பொங்கு

என்று இத்தொடருக்கான இப்பத்தியை நிறைவு செய்கிறேன்.

'சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல். தூர விலகி நில்'

தொடருவம்.


# MARKANDAN & CO
## SOLICITORS & ESTATE AGENTS

**We also Specialise in....**

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்
- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 08712887343 Fax: 08712887353
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.